DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team 416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc. "My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன் 647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN 416-908-5656
SUBRA Mortgage Solutions Inc.
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1270
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday August 7, 2020




# வாக்குகள் எண்ணும் நிலையத்தில் கோட்டாபாய சுமந்திரனைப் பாதுகாக்க அனுப்பிய அதிரடிப் படை 'மாவை'யின் புதல்வரை தாக்கியது

(யாழ்ப்பாணத்திலிருந்து டிசாந்த்)

நடைபெற்று முடிந்த இலங்கையின் பாராளுமன்றத்திற்கான தேர்தலில் பதியப்பெற்ற வாக்குகள் வைக்கப்பெற்றிருந்த, யாழ் வாக்கெண்ணும் மையத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சென்றதையடுத்து, அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. இதைதொடர்ந்து வாக்கெண்ணும் மையம் கலவர பூமியானது. அங்கு சுமந்திரனுக்கு எதிராக எதிர்ப்புக் கோசங்கள் எழுப்பிய பல இளைஞர்கள் தாக்கப்பட்டனர். அவர்களில் மாவை சேனாதிராஜா அவர்களின் புதல்வரும் ஒருவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உள்ளே விபரமான செய்தி)

# யாழ்ப்பாணத்தில் நீதியரசர் விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் தேர்தலில் வெற்றியீட்டினர்



நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் மிகவும் கடுமையாக உழைத்த தமிழ் மக்கள் கூட்டணித் தலைவரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வருமான சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வெற்றியீட்டி உள்ளனர். அவர்களுக்கு தமிழ் மக்கள் உலகெங்குமிருந்து பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.



MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

# இலங்கைப் பராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி 145 ஆசனங்களை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது



நடைபெற்று முடிந்த பராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி 145 ஆசனங்களை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. நாடு முழுவதும் அக்கட்சி ஒரு சில இடங்களைத் தவிர அனைத்து இடங்களிலும் வெற்றி ஈட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

22 தேர்தல் மாவட்டங்களிலும் 6,853,693 வாக்குகளை பெற்று 59.09 வீத வாக்குப் பதிவுடன் இந்த வெற்றியை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அடுத்த நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சி 10 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அந்த வகையில் மொத்தமான 225 ஆசனங்களில் மூன்றில் இரண்டு பங்கான 150 ஆசனங்களை பெறுவதற்கு மேலும் 5 ஆசனங்கள் பெற வேண்டியுள்ள நிலையில், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (2 ஆசனங்கள்) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (01 ஆசனம்), தேசிய காங்கிரஸ் (01 ஆசனம்) உள்ளிட்ட கட்சிகள் இணைவதன் மூலம், அதனை அடையும் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன..

இதன் அடிப்படையில், 196 விகிதாசார முறை மூலமான ஆசனங்களில் 128 ஆசனங்களையும், தேசியப் பட்டியில் மூலமான 25 ஆசனங்களில் 17 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பெற்றுள்ளது.

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron Team

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
Property Max Realty Inc. Brokerage

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

SAVE UPTO 75% REFINANCE

MONTHLY SAVING $2,478



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


உதயன் கதிரோட்டம்

# தேர்தல் முடிகள் வெளியான வேளையில் பல 'உண்மைகளும்' வெளியே வந்தனவோ!

கொரோனா என்னும் கொடிதான அச்சுறுத்தலையும் அமைதிப்படுத்தி, பாராளுமன்றத் தேர்தல் ஒன்றை கடந்து வந்துள்ளது, இனப்பிரச்சனையை இன்னும் முடிவுக்கு கொண்டுவராத இலங்கை என்னும் சிறிய நாடு.

அசம்பாவிதங்கள் மிகவும் குறைந்த ஒரு தேர்தலைக் கண்டு ஆறுதலடைந்தேன் என்று நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றார் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ச. படைகளுக்கெல்லாம் அதிபதியான ஜனாதிபதி அவர்கள் நம்பிக்கை வைத்துள்ள இலங்கை தேர்தல் ஆணைக் குழு, தனது பணியை திறம்பட ஆற்றியிருக்கின்றது என்ற புகழாரங்கள் நான்கு திசைகளிலிருந்தும் எழுகின்றன.

இலட்சங்களைத் தாண்டும் எண்ணிக்கையில் இராணுவப் படை, பொலிஸ் படை, அரச சேவையாளர்கள் என அரசாங்கத்தின் ஆளணி இந்த தீவெங்கும் திரண்டு பரந்திருந்தது.

மக்கள் தங்கள் வாக்குகளை மிகவும் அவதானமாக பதிவு செய்து ஜனநாயக உரிமைக்கு மதிப்பளித்தார்கள்.

ஏழாயிரத்திற்கு அதிகமான வேட்பாளர்கள் போட்டியிட்ட நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் வெளிவர வெளிவர மக்கள் வெற்றிகளைக் கொண்டாடினார்கள். துள்ளிக் குதித்தார்கள். விருந்துண்டு மகிழ்ந்தார்கள்.

தோல்விகளைச் சந்தித்தவர்கள் துவண்டு போனார்கள். அவர்களில் பலர் வாயடைத்து நின்றார்கள். எங்களில் எங்கேயோ தவறு இருக்கின்றது என்று ஆறுதலடைந்திருக்கலாம் அவர்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தின் சிறந்த உயர் கல்லூரிகளில் ஒன்றான மத்திய கல்லூரியில் மாத்திரம் எப்படி ஒரு அநியாயம் அரங்கேறியது என்று தான் எமக்கு விளங்கவில்லை. அதுவும் ஒரு பெண் வேட்பாளருக்கு எதிராக.

அவர் கூட பாராளுமன்ற உறுப்பினரான தனது கணவரை தென்னிலங்கை ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சன்னங்களுக்கு இரையாகக் கொடுத்தவர். கொழும்பின் உயரிய மகளிர் கல்லூரி ஒன்றின் சிறந்த ஆசிரியைகளில் ஒருவராகத் திகழ்ந்தவர். கட்சியின் முக்கியஸ்த்தர் ஒருவர் கேட்டுக்கொண்டார் என்பதற்காக தனது ஆசிரியப் பதவியைத் துறந்து துணிச்சலோடு தேர்தல் போட்டியில் களமிறங்கினார். "ஜனநாயக நாடுதானே! எல்லாம் சட்டத்தின் அடிப்படையில் நீதி சார்ந்து நிறைவேறும்" என்று நிச்சயமாக நம்பிய வண்ணம் இருந்திருப்பார்.

ஆனால், அவர் கைகளுக்கு வந்த கனி, தட்டிப் பறிக்கப்படப் போகின்றது என்பதை உணராமல் அவர் பிறந்த ஊரில் கொண்டாட்டம் ஒன்றுக்கு வந்த அழைப்பையும் ஏற்றுக்கொண்டாராம்.

ஆனால் இறுதி நேரத்தில் அவர் கைகளுக்கு மிக அருகே இருந்த அந்த வெற்றிக் கனி, தட்டிப் பறிக்கப்பட்ட கொடுமையான காட்சி அரங்கேறியது. உண்மை தெரிந்தவர்கள் குமுறினார்கள்.

ஆனால் அந்த பெண் வேட்பளரோ கண்களில் நீர் மல்க, தன் புதல்விகள் கதறிய வண்ணம் தன்னை அணைத்து நிற்க, அந்த இடத்தை விட்டு வெளியேறுகின்றார்.

அரச இயந்திரத்தின் பல பாகங்கள் ஒன்று சேர்ந்து நடத்திய அழுத்தமா இந்த மோசடி?

எத்தனை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், ஆணைக்குழுவின் மேற்பார்வை, எல்லாமே நிறைந்திருக்க எப்படி முடிந்தது ஜனாநாயகத்தை ஏமாற்ற? எப்படித் துணிந்தனர் ஒரு தாய்க்கு சமனான புத்திஜீவி ஒருவரை நடுத் தெருவில் நிறுத்தி கண்ணீர் சொரிய வைக்க?

தேசத்தின் அதிபர் ஏற்பாடு செய்திருந்த அதிரடிப் படையினரும் அநீதிக்கு துணை நின்றனரோ? அப்பாவி இளைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் ஆவேசத்துடன் தாக்கப்பட்டமை எதனைக் காட்டுகின்றது?

ஏதோ ஒரு நன்றிக் கடன் நேற்றைய நாளில் அந்த அநீதியை இழைக்க காரணமாக இருந்திருக்குமோ. தலைவர்களின் கழுத்துகளுக்கு வரவேண்டிய கயிற்றை கழற்றி விட்ட கயமைக்காக, நேற்று நன்றிக் கடன் நாடகம் அரங்கேறியதோ! தங்கள் இடர் தீர்த்த ஒருவருக்காய் ஒரு புத்திஜீவியான ஒரு தமிழ் அன்னை பலிக்கடா ஆனாரா? உண்மைகள் எப்போதோ வெளியே வந்துவிட்டன.


GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை

ஸ்காபுறோ நகரில
Bellamy / Progress
சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள Doors & Windows தொழிற்சாலைக்கு மர வேலை மற்றும் Spray Paint செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.

Call:
(416) 875-4119

SPOKEN ENGLISH

100% உத்தரவாதம்!
ஆங்கிலம் எதுவும் கதைக்கமுடியாதவர்கள் 2 மாதத்தில் சரளமாக பேச முடியும்
Letter writing, Essay writing, Citizenship exam preparation மற்றும் IELTS preparation.
நம்பிக்கையுடன் அழையுங்கள்

துஸ்யந்தி:
(647) 606-1009

GENERAL HELPERS NEEDED

Renovation வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
Full Time / Part Time available.
Call:
416-706-8160

WAREHOUSE WORKERS NEEDED

ஸ்காபுறோ நகரில்
Markham / Ellesmere
சந்திப்புக்கு அருகில் உள்ள ஒரு தொழில் ஸ்தாபனத்திற்கு Warehouse Workers தேவை.
Full-time for morning & afternoon shifts.
விண்ணப்பதாரிகள் கடுமையாக வேலை செய்பவர்களாகவும், அதிக சிரத்தை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். சம்பளத்துடன் பயிற்சி வழங்கப்படும்.
ஆர்வமுடையோர் Essa என்பவரை (647) 993-2872 என்னும் இலக்கத்தில் அழைக்கவும்.

மரவேலை தொழிலாளர்கள் தேவை

ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் Ideal Stairs நிறுவனத்திற்கு தச்சுவேலை திறம்படச் செய்யக்கூடிய மரவேலைத் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை. குறிப்பாக, மரத்தினாலான படிகள் (Stairs) செய்யும் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாக அழைக்கவும்.

தொடர்பு:
(416) 830-3932

உணவகத்தில் வேலை வாய்ப்பு

ரொரன்ரோ நகரத்திலிருந்து சுமார் 6 மணி நேர வாகன ஓட்டத் தூரத்தில் உள்ள Sault St. Marie நகரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தென்னிந்திய - இலங்கை உணவகத்தில் வேலை செய்வதற்கு சமையல்காரர்கள் (Cook-Chef ) மற்றும் முகாமையாளர்கள் ஆகியோர் உடனடியாகத் தேவை. விண்ணப்பதாரிகள், இலங்கை மற்றும் தென்னிந்திய உணவு தயாரிப்பதில் அனுபவம் இருந்தால் விரும்பத்தக்கது. சுமையல்காரர்களுக்கு மணித்தியாலத்திற்கு 20 டாலர்கள் சம்பளம். முகாமையாளர்களின் சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

அழைக்க வேண்டிய தொலைபேசி:
1(807) 228-2882

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!

உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.

- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca

MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1

ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

இலங்கை செய்திகள்

# சுமந்திரனின் சுய கௌரவச் சிந்தனைகளுக்கு "சாவு மணி" அடியுங்கள் தமிழ் மக்களே!



மாங்கனித் தீவாம், இலங்கையில் நாளை புதன்கிழமை 5ம் திகதி மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறுகின்றது. பாராளுமன்றக் கதிரைகளின் சுகபோகத்தை இதுவரை அனுபவித்த பல வேட்பாளர்கள் அந்த பொற்காலத்தை மீண்டும் பெறுவதற்காய் இந்த இரவு வேளையிலும் கபடத் தனமான சிந்தனைகளோடு ஆலோசனைகளில் ஈடுபட்டு இருப்பார்கள்.

இன்னொரு பக்கத்தில், இந்தத் தேர்தலில் எமது தமிழ்க் கட்சிகளில் சில. வெற்றிகளை ஈட்டி எமது மக்களின் குரலாக எழுந்து நின்று பாராளுமன்றம் என்ற மேடையை ஒரு களமாகப் பாவித்து. ஒரு ஜனநாயகப் போராட்டத்தை நடத்தி எம் மக்களுக்கும் போரினால் பாதிக்கப்பட்ட போராளிகளின் குடும்பங்களுக்கும் பக்கத் துணையாக நிற்போம் என்ற இதய சுத்தியோடு போட்டியிடுகின்றார்கள்.

நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று, "மாங்கனித்தீவின் மறுபாதி எங்களுக்கு" என்ற விடுதலை வேட்கையொடு போராடிய ஈழத் தமிழ் இனத்திற்கு இந்த தேர்தலின் முடிவுகள் எவ்வாறான பாதிப்புகளை அரசியல் ரீதியாகவும், இனரீதியாகவும். பொருளாதார ரீதியாகவும். மதரீதியாகவும் கொண்டு வரப்போகின்றன என்ற மனக்கிலேசத்தை ஏற்படுத்தும் ஒரு தருணமாகவே உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இந்தத் தேர்தல் அவர்கள் இதயங்களில் காயங்களை ஏற்படுத்திய ஒன்றாகவே உள்ளது எனலாம், அதற்கு பல உதாரணங்களைச் சொல்லலாம். எனினும் அந்த காயங்களுக்கு மருந்தையாவது தடவக் கூடிய கட்சிகளோ அன்றி வேட்பாளர்களோ மக்களுக்காக களம் இறங்கியுள்ளார்கள் என்ற ஒரு நிம்மதியும் அவர்களிடத்தே துளிர்விட்டுள்ளதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

இன்னொரு பக்கத்தில் "நாங்கள் உங்கள் வேட்பாளர்களே! உங்கள் பிரச்சனைகளைகளுக்கு தீர்வையும் பொருளாதார மேம்பாட்டையும் பெற்றுதருகின்றோம்" என்று பிரச்சாரங்களை மேற்கொண்டவண்ணம், தமிழர் ம்ணணிலேயே தென்னிலங்கை ஆட்சியாளர்களைப் பாதுகாக்கும் வகையில் இயங்கிவரும் இராணுவத்தின் அதி விசேட பாதுகாப்புப் பிரிவினர்கள் 24 மணிநேரமும் சூழ்ந்திருக்க, எமது மக்களிடம் வாக்கு கேட்டு நிற்கும் வேட்பாளர்களையும் நாம் சந்திக்கின்றோம்.

இரத்தம் சிந்திய எமது தமிழர் மண்ணில் இன்னும் ஆங்காங்கே போராட்டங்களை நடந்த வண்ணமே உள்ளன. இந்தப் போராட்டங்கள் எதை உலகிற்கு காட்டுகின்றன என்றால் எமது மக்களின் பல பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன என்பதையே!

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம், காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டதனால் வீதிகளுக்கு கொண்டு வரப்பட்ட அபலைகளின் குரல்கள் இன்னும் ஓய்ந்து விடவில்லை. அவர்களின் போராட்டங்கள் பல ஒடுக்கப்படுவதைக் காண்கின்றோமே தவிர அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதற்குரிய சான்றுகள் எதுவும் நிறுவப்படவில்லை.

ஆனால், இவ்வாறான நிலையிலும், எமது தமிழர் மண்ணில் ஒரேயொரு வேட்பாளர் மட்டும் அதிக எண்ணிக்கையில் அதிரடிப்படையினர் சூழ்ந்து வர, தமிழ் மக்களின் வாக்குகளை "விழுங்குவதற்காக" வலம் வருகின்றார். ஆமாம்! "நான் ஒரு இலட்சம் விருப்பு வாக்குகளை இந்தத் தேர்தலில் பெற்று வெற்றியீட்டுவேன்" என்று மார்தட்டும் அவரது பிரச்சாரத்தை இவ்வாறு குறிப்பிடாமல், எவ்வாறு நாம் எழுதுவது?.. தமிழர் அரசியலுக்குள் திடீரென ஒரு பச்சைத் தலைவனால் கொண்டுவரப்பட்ட அந்த வேட்பாளர் இன்றும் அந்தத் தலைவருக்கு விசுவாசமானவராக உள்ளார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

ஆனால் அவர் எந்த அரசாங்கம் என்றாலும் அவர்களோடு ஒத்துழைத்து, அமைச்சர் பதவியைப் பெற்று தமிழர் பிரச்சனைகளைத் தீர்ப்பேன் என்று கூறுகின்ற துணிச்சலை யார் இவருக்கு வழங்கியது என்பதே எம்முன் எழுகின்ற ஒரு முக்கிய கேட்வியாகும்.

செய்திகளை சேகரிப்பதற்காக அமைச்சர்களையே சந்திக்கத் தயங்கும் பத்திரிகையாளர்கள் உள்ள எமது இனத்தின் மத்தியில், இந்த வேட்பாளர் "நான் உங்களின் ஒருவன்" என்று தமிழ் மக்களிடம் கூறிக்கொண்டு அமைச்சர் பதவியைப் பெற்று தமிழர் பிரச்சனைகளைத் தீர்த்துத் தரப்போகின்றாராம்.

சுயகௌரவம் பெறும் நோக்கோடு இந்த தேர்தலில் தனது சிந்தனைகளை முன்வைத்து அமைச்சர் பதவி என்ற கனவோடு உள்ளதால் தான் அமைச்சர்களுக்கு வழங்கப்பெறும் அதிரடி இராணுவத்தினரோடு வலம் வருகின்றார் போலும்.

அன்பான தமிழ் பேசும் மக்களே! இதுவரையில் நாம் குறிப்பிட்ட விடயங்கள் மற்றும் உதாரணங்களிலிருந்து, நாம் குறிப்பிட்ட தமிழ் பேசும் வேட்பாளர் யார் என்று உங்களுக்கு புரிந்திருக்கும். வார்த்தைக்கு வார்தை தன்னைப் பற்றி எழுகின்ற விமர்சனங்களுக்கு குதர்க்கமாகவும், விசமத்தனமாகவும் பதிலளித்து எமது மக்களின் வாக்குகளைப் பறித்து தென்னிலங்கைக் கட்சிகளின் நலன் காக்க நினைக்கும் கபடத்தனத்தோடு தேர்தலில் போட்டியிடும் சுமந்திரன் என்னும் கூட்டமைப்பு வேட்பாளர் பற்றியே நாம் இங்கு எழுத முனைந்தோம்.

இலங்கையில் இன்னும் சில மணித்தியாலங்களில் வாக்களிக்கத் தயாராகியுள்ள எமது தாயக மக்களுக்கும், எங்கள் மண்ணில் என்ன மாற்றங்கள் இந்த தேர்தல் மூலம் நிகழப்போகின்றன என்று ஏக்கத்தோடு காத்திருக்கும் புலம் பெயர் தமிழ் மக்கள் அனைவருக்குமாக எமது கருத்துக்களை இங்கே பதிவு செய்கின்றோம்.

தனது சுயகௌரவச் சிந்தனைகளோடு தேர்தல் களத்தில் நிற்கும் சுமந்திரன் தோல்வியைச் சந்தித்து, இனிமேல் இலங்கைத் தமிழர் அரசியலிலோ அன்றி புலம் பெயர் தமிழர் விவகாரங்களிலோ, ஈடுபடா வண்ணம், அவருக்கு ஒரு "பாடததை புகட்ட வேண்டும்" என்று அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

*(தேர்தல் தினமான 5ம் திகதி, வாக்களிப்பு ஆரம்பிக்க முன்னர் எழுதப்பட்ட கட்டுரை இது)*

*- சத்தியன்*

# "கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரும் தமிழரசுக் கட்சியின் மாவையும் உறுப்பினர்களை அரவணைத்துச் செல்வதில் பெரும் தவறிழைத்து விட்டார்கள்"

### ஐபிசி தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் "காலைக்கதிர்" பத்திரிகையின் ஆசிரியர் வித்தியாதரன் தெரிவிப்பு...



இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் வெளியாகத் தொடங்கியுள்ள இந்த நேரத்தில் இந்த பதிவை இங்கே எழுதத் தொடங்கியுள்ள வேளைக்கு சற்று முன்னர், யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐபிசி தமிழ் தொலைக் காட்சி நிறுவனத்தின் கலையகத்தில் யாழ்ப்பாணம் "காலைக்கதிர்" பத்திரிகையின் ஆசிரியர் வித்தியாதரன் கலையகத்தின் நிகழ்ச்சிப் பொறுப்பாளர்களால் பேட்டி காணப்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

அவருடைய பதில்கள் காத்திரமாக இருக்கின்றன. தமிழர் அரசியல் மற்றும் தென்னிலங்கை அரசியல், இலங்கையின் கோத்தபாய ஆட்சியின் பௌத்தவாதம், சிங்கள வாதம் ஆகியவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து அவரது பதில்கள் அமைகின்றன.

ஒரு கட்டத்தில் பேட்டி காண்பவர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு, அதுவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், சற்று பின்தங்கிய நிலையில் உள்ளதைப் பற்றி கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டாவறு தெரிவித்தார்.

அவரது பதில் பின்வருமாறு அமைந்தது. "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவையும் உறுப்பினர்களை அரவணைத்துச் செல்வதில் பெரும் தவறிழைத்து விட்டார்கள். குறிப்பாக கடந்த காலங்களில், தங்கள் கட்சியிலிருந்து பல ஆளுமைகள் விலகிச் செல்வதற்கு இருவருமே காரணமாக இருந்தார்கள். மாவை சேனாதிராஜா அவர்கள் ஆளுமை உள்ளவர்களை கட்சியின் பக்கம் வைத்திருப்பை விரும்பவே இல்லை.



அவரைப் போலவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் திரு சம்பந்தர் அவர்களும் தனது மாவட்டமான திருகோணமலையில் மிகவும் மோசமான முறையிலேயே அரசியல் நடத்திவருகின்றார். இவரது நடவடிக்கைகள் அங்கு சிங்களத்தையும் பௌத்தத்தை மேலும் நிலைநாட்டுவதற்கு உதவியாக அமைகின்றன. இவ்வாறான எதிர் நடவடிக்கைகளை கையாளுவதற்கு ஏற்ற ஆளுமை மிக்க இளம் தலைவர்களை அவர் திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கவில்லை. உதாரணமாக சிவாஜிலிங்கம் போன்ற உற்சாகமாகவும் துணிவாகவும் அரசியல் செய்யக் கூடிய வேட்பாளர்களை அவர் தன்னோடு இணைத்துக் கொள்ளவில்லை. அவ்வாறான சிந்தனையும் அவரிடத்தில் இல்லை." என்று குறிப்பிட்டார்.

# திருமலை வாக்கெண்ணும் நிலயத்தில் குழப்பத்தை விளைவிக்க முனைந்த பெரும்பான்மையின வேட்பாளர்



திருகோணமலை விபுலானந்தா கல்லூரி வாக்கெண்ணும் மத்திய நிலையத்தில் இன்று பிற்பகல் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர் ஒருவரும் வாக்கு எண்ணும் நிலையத்துக்குள் செல்ல முற்பட்ட வேளை பொலிஸார் அவரை தடுத்துள்ளனர். இதனையடுத்து அங்கு வாக்குவாதம் ஏற்பட்டதுடன், குழப்பநிலை தோன்றியிருந்ததாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

குறித்த வேட்பாளர் உரிய இடத்துக்கு வருகை தந்தபோது அவரிடம் பொருத்தமான அனுமதிப்பத்திரம் இன்மையால் அவரை உள்ளே நுழைய அனுமதிக்காது அவரை பொலிஸார் வாக்கு எண்ணும் நிலையத்தில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.திருகோணமலை மாவட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளராக போட்டியிட்ட பியந்த பத்திரனை என்பவரே இவ்வாறு வெளியேற்றபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டு கனடிய உறுப்பினர்களுக்கு எதிரான, நெறிமுறை ஆணையகத்தின் பரிந்துரை நிராகரிப்பு

அண்மையில் நாடுகடந்த தமிழீழ அரசங்கத்தின் இரண்டு கனடிய உறுப்பினர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, அவர்கள் இருவரையும், இரண்டு மாதங்களுக்கு அரசவை நடவடிக்கைகளில் பங்கெடுப்பதை தடுக்க வேண்டும் என்ற நாடுகடந்த தமிழீழ அரசின் நெறிமுறை ஆணையகத்தின் பரிந்துரையானது, அரசவை உறுப்பினர்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அது நிராகரிக்கப்பட்டது.

மேற்படி இரண்டு கனடிய உறுப்பினர்களும் கனடாவில் நாடு கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் தங்கள் நேரத்தை அர்ப்பணித்து பணியாற்றியிருந்தும் கூட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தற்போதைய நிதி அமைச்சர் தாக்கல் செய்த இந்த குற்றச்சாட்டுக்களுக்கு தனது வலுவான ஆதரவைக் காட்டி நின்ற அதன் பிரதமர் அவர்களும் மேற்படி இரண்டு கனடிய உறுப்பினர்கள் அவசியம் இடை நிறுத்தப்பட வேண்டும் என்பதை தீவிரமாக வரவேற்றிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க்து.

எனினும் இணையவழி ஊடாக சில நாட்களுக்கு முன்னர் கூடிய நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையில் இந்த பரிந்துரை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது , மேற்படி இரண்டு உறுப்பினர்கள் மீதான இடைநிறுத்தம் நியாயமற்றது என்று தீர்மானம் நிராகரிக்கப்ப்ட்டது. இவ்வாறான முடிவானது, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் தன்மை மேலோங்கியிருப்பதை வரவேற்ற சில உறுப்பினர்கள், வாக்கெடுப்பின் முடிவுகளை நிச்சயம் புலம்பெயர் தமிழ் மக்களும் நம்பிக்கையோடு வரவேற்பார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இது இவ்வாறிருக்க தாங்கள் எண்ணியவாறு ஒரு முறை கேடான பரிந்துரையை அரசவை நிராகரித்த முடிவு தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமரும், நிதி அமைச்சரும் ஏன் தங்கள் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யக் கூடாது என்றும் சில அரசவை உறுப்பினர்கள் எழுத்து மூலம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைத் தலைவருக்கு கடிதம் எழுதவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

# விருப்பு வாக்கு அறிவிப்பில் சந்தேகம் உள்ளது என தேர்தல் ஆணையாளரிடம் முறையிடத் சசிகலா ரவிராஜ் தீர்மானம்



யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியில் விருப்பு வாக்குகள் விடயத்தில் குழப்ப நிலை ஏற்பட்ட நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் இது தொடர்பாக தனது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் குழறுபடி ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிட்டுள்ள தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சசிகலா ரவிராஜ், இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவில் முறையிடவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், “தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட எனக்கு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் இரண்டாவது இடம் கிடைத்திருந்தது. இதனை, ஊடகங்களும், சில அதிகாரிகளும் உறுதிப்படுத்தியிருந்தனர். இந்நிலையில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும்வரை காத்திருந்தேன். நள்ளிரவு 2 மணிவரை காத்திருந்து சரியான நிலைவரத்தை அறிவிக்கும்படி நான் கேட்டிருந்தேன். இருந்தாலும் அவர்கள் காலதாமதம் செய்தார்கள். அதன் பின்னர் இறுதியாக எனது விருப்பு வாக்கு நிலை நான்காவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த மாற்றம் எவ்வாறு ஏற்பட்டது என்பது மிகவும் ஆச்சரியமாகவும், கேள்விக்குறியாகவும் உள்ளது. இருப்பினும் இதனைப்பற்றி தமிழரசுக் கட்சித் தலைவரிடம் முறையிடவுள்ளேன். அத்துடன், தேர்தல் ஆணையாளரிடமும் இதைப்பற்றி தெரிவித்து இதற்கான விளக்கங்களைக் கோரவுள்ளேன்” என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, தனது ஆதரவாளர்கள் சிலர் குறித்த குழப்பகரமான சூழ்நிலையில் தாக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாக்குகள் எண்ணும் நிலையத்தில் கோட்டாபாய சுமந்திரனைப் பாதுகாக்க அனுப்பிய அதிரடிப் படை ‘மாவை’யின் புதல்வரை தாக்கியது

-யாழ்ப்பாணத்திலிருந்து டிசாந்த்



நடைபெற்றுமுடிந்த இலங்கையின் பாராளுமன்றத்திற்கான தேர்தலில் பதியப்பெற்ற வாக்குகள் வைக்கப்பெற்றிருந்த, யாழ் வாக்கெண்ணும் மையத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சென்றதையடுத்து, அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. இதைதொடர்ந்து வாக்கெண்ணும் மையம் கலவர பூமியானது.

இலங்கை நேரப்படி நேற்று இரவு யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் விருப்பு வாக்குகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பதாகவே அந்த வாக்கெண்ணும் மையத்திற்கு சென்றார். அவருடன் சயந்தன் என்னும் சுமந்திரனின் வால் ஒருவரும் அங்கு சென்றிருந்தார்.



இதன்போது, அங்கு குவிந்திருந்த பலரும் அவருக்கு எதிராக குரல் எழுப்பினர். இலங்கை தமிழ் அரசு கட்சியின் இளைஞர் அணியினரும் அவருக்கு எதிராக குரல் எழுப்பினர். தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய முன்னணி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் எதிர்த்து குரல் எழுப்பின கோட்டாபய ராஜபக்சவின் விசேட உத்தரவில் அணைமயில் எம்.ஏ.சுமந்திரனுக்கு மேலதிக விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. பெரும் படைப்பாதுகாப்புடனேயே சுமந்திரன் அங்கு சென்றார்.





கூட்டத்தின்பெரும் எதிர்ப்பிலிருந்து சுமந்திரனை பாதுகாத்து அதிரடிப்படை பெரும் அரண் அமைத்தது. அத்துடன், கூட்டத்தினரை கலைந்து செல்ல பணித்தனர். எனினும், இளைஞர்கள் அங்குகுழுமியிருந்தனர்.

இதையடுத்து நிலைமை கட்டுமீறி செல்ல, இளைஞர்கள் மீது சுமந்திரனின் பாதுகாப்பு அதிரடிப்படையினர் கொடூர தாக்குதல் நடத்தினர். இதன்போது, தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதனையும் அதிரடிப்படையினர் பிடித்து கொடூரமாக தாக்கினர்.

தாக்குதல் நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்ததை தொடர்ந்து சுமந்திரனை பாதுகாப்பாக அங்கிருந்த வெளியேற்றினர். எனினும், இளைஞர்கள் பின்தொடர்ந்து சென்று துரோகி என குரல் எழுப்பினர்.

நடந்து முடிந்த தேர்தலில் அமரர் ரவிராஜ் அவர்களின் துணைவியார் சசிகலா ரவிராஜ் அதிக விருப்பு வாக்குகள் பெற்றிருந்தாலும், அவரை நான்காவது இடத்திற்கு தள்ளிபின்னர் சுமந்திரன் வெற்றி பெறும் வகையில் அரச அதிகாரிகள் சிலர் திட்டங்கள் வகுத்து செயற்பட்டதாக உறுதி செய்யப்படாத செய்திகள் யாழ்ப்பாணத்திலிருந்து எமக்குக் கிடைத்துள்ளன.

இங்கு காணப்படும் படங்கள் எமது செய்தியாளரால் அங்கிருந்து அனுப்பப்பட்டவை.

***கனடா உதயன் செய்திப் பீடம்***

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



# படபிடிப்பின்போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.1 கோடி கமல்ஹாசன் வழங்கினார்

இந்தியன் - 2 படப்பிடிப்பில் உயிரிழந்த 4 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.1 கோடி இழப்பீடுத் தொகையை கமல்ஹாசன், இயக்குநர் சங்கர் உள்ளிட்டோர் வழங்கினர்.அப்போது நடிகர் கமல்ஹாசன் உடன் இயக்குனர் சுமுசெல்வமணியும் இருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர், இந்தியன்-2 படப்பிடிப்பின்போது, படப்பிடிப்புக்கு பயன்படுத்திய கிறேன் ஒன்று உடைந்து விழுந்ததில் திரைப்படத்துறையில் பணியாற்றும் தொழில்நுட்பவியலாளர் உட்பட சிலர் மரணமானது எமது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

# பெய்ரூட் துறைமுகத்தை சிதறடித்த அம்மோனியம் நைட்ரேட் பற்றி ஒரு பார்வை...



உலகத்தையே உலுக்கிய ஒரு சம்பவமாக பெய்ரூட் துறைமுகம் வெடிவிபத்து இடம் பெற்றுள்ளது. இந்த வெடி விபத்துக்கு காரணமாக அம்மோனியம் நைட்ரேட் என்ன? என்பதை இங்கே பார்ப்போம். அம்மோனியம் நைட்ரேட் என்பதன் வேதியியல் மூலக்கூறு பெயர் ேர்4ழே3 ஆகும். இயற்கையாகவே கிடைக்கும் இந்த வேதிப்பொருள் பெரும்பாலும், விவசாயம் மற்றும் வெடி பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

பயிர்களுக்கு தழைச்சத்து கிடைப்பதற்காக இது உரமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. பெரிய கட்டிடங்களை இடிக்கவும், பாறைகளை உடைக்க மற்றும் கிணறுகள் தோண்டுவதற்கு தேவையான வெடிபொருட்கள் தயாரிக்கவும் அம்மோனியம் நைட்ரேட் பயன்படுகிறது. ஆனால் அம்மோனியம் நைட்ரேட் எளிதாக வெடிக்கும் ரசாயனம் இல்லை எனவும் அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். அம்மோனியம் நைட்ரேட்டை ஒரு அளவுக்கு மேல், ஓரிடத்தில் நீண்டகாலமாக வைத்திருந்தால், அது குறிப்பிட்ட அளவு வெப்பத்தை வெளியிடும் எனவும் சொல்லப்படுகிறது. அதில் இருந்து வெளியாகும் வெப்பமே, நெருப்பாக மாறும் என்றும், அம்மோனியம் நைட்ரேட்டில் இருந்து ஆக்சிஜன் வெளியாகும் என்பதால், அதுவே தீ கொழுந்துவிட்டு எரிய வாய்ப்பாக இருக்கும் எனவும் கூறுகின்றனர். இது பற்றி எரியும்போது சிவப்பு நிற புகையை வெளியிடும் என்றும், அதிக நச்சுத்தன்மை கொண்ட இந்த புகையை ஜீவராசிகள் சுவாசித்தால் அது அவர்களை நொடியில் கொல்லும் என்றும் அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.



# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் ஸ்தாபிக்கப்பெற்று 28 வருடங்களுக்குப் பின்னர் சொந்தமான கட்டடத் தொகுதியை தனதாக்கியுள்ளது

கனடாவில் தமிழ் பேசும் வர்த்தகர்களின் முன்னேற்றத்திற்காக 28வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப் பெற்ற கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நேற்று முன்னதினம் தனக்கு சொந்தமான ஒரு கட்டடத்தொகுதியை கொள்வனவு செய்து உத்தியோகபூர்வமாக அதனை பொறுப்பேற்றுள்ளது.







கனடாவில் தமிழ் மக்கள் அதிகளவு வாழும் நகரங்களில் முக்கியமானது என்று கருதப்படும் மார்க்கம் நகரத்தில் இந்த புதியதும் சொந்தமானதுமான கட்டடத் தொகுதி அமைந்துள்ளதை கனடிய தமிழர் வர்த்தகச் சமூகமும், தமிழ்க் கனடியர்களும் வரவேற்றுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சம்மேளனத்தின் தற்போதைய தலைவரான திரு. சாந்தலிங்கம் பஞ்சலிங்கம், கட்டடத் தொகுதி கொள்வனவு செய்வதற்கென அமைக்கப்பெற்ற விசேட குழு, பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகியோரின் கடின உழைப்பும் அர்ப்பணிப்புடனான சேவை மனப்பான்மையுமே இந்த கட்டடத் தொகுதி கொள்வனவு செய்யப்பட்டமைக்கு காரணிகளாகத் திகழ்கின்றன.

அதிலும் மிக முக்கியமாக எவ்விதமான மாதாந்த தவணைக் கட்டணமோ, அன்றி கடன் தொகையோ இல்லாம் வர்த்தக சம்மேளனத்தின் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து இந்த கட்டடத்தொகுதி அதன் கைகளுக்கு கிட்டியுள்ளதையும் நாம் பாராட்டியே தீர வேண்டும்.

மார்க்கம் நகரில் 80 Travail Road, Unit 1 & 2 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள இந்த புதிய கட்டடத் தொகுதியானது, 2310 சதுர அடி பரப்பளவு கொண்ட பிரதான தளத்தையும் 700 சதுர அடி பரப்பளவைக் கொண்ட மாடியையும் கொண்டுள்ளது. மாடியில் அமைந்துள்ள மண்டபத்தில் சம்மேளனத்தின் கூட்டங்கள் மற்றும் ஒன்று சகூடல்கள் ஆகியனவும் நடத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.


தமது புதிய முயற்சியில் வெற்றியீட்டியுள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தையும் அதன் தற்போதைய இயக்குனர் சபையினரையும் கனடா உதயன் நிறுவனம் வாழ்த்துகின்றது.




# கின்னஸ் சாதனை படைத்த தமிழ்ச் சிறுமி

பதினொரு வயது நிரம்பிய செல்வி சங்கவி ரதன் இடுப்பில் வளையம் ஒன்றைச் சுற்றியவாறு றூபிக்கின் கனசதுரத்தின் தனித்தனி நிறங்களை ஒருகையினால் ஒழுங்குபடுத்தி கின்னஸ் உலகசாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். இவர் ஓகஸ்ட் முதலாம் திகதி கனடா மிஸிஸாகா நகரில் கின்னஸ் சாதனை நிறுவனப் பிரதிநிதிகள் முன்னிலையில் 55 நிமிடங்களில் 30 தடவைகள் 3X3 றூபிக்கின் கனசதுரத்தினை ஒழுங்குபடுத்தி, 25 தடவைகள் என்றிருந்த முன்னைய கின்னஸ் சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தி உள்ளார்.

யாழ், தீவகம் அனலைதீவைச் சேர்ந்த பெற்றோர்களான பாலசிங்கம் ரதன் - வரதராஜன் வசந்தி தம்பதிகளின் இளைய மகளான சங்கவி கொரோனாக் காலத்திலான முடக்கத்தில் வீட்டில் இருந்த காலத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்தி இந்த உலக சாதனையைப் புரிந்துள்ளார். புத்தகம் ஒன்றை வாசித்தும் பல காணொலிகளைப் பார்த்தும் இதில் உள்ள நுட்பங்களைக் கற்றுத் தெளிந்து மூன்று மாதங்களாகப் பயிற்சி செய்து இவர் இதனைச் சாத்தியமாக்கியுள்ளார். இடுப்பில் வளையம் சுற்றுவதை தனது இளவயதில் கற்றிருந்ததும் சங்கவி இந்தச் சாதனையை நிறைவேற்ற உதவியாக இருந்தது.





புதுவிடயங்களைக் கற்பதில் ஆர்வமுள்ள சங்கவி இசைக்கருவி வாசித்தல், வாய்ப்பாட்டு, விளையாட்டுக்கள் என்பவற்றில் ஆர்வமாக ஈடுபட்டு வருபவர். பிறப்பின்போது ஏற்பட்ட காயம் ஒன்றினால் வலக்கரம் இயங்கமுடியாத நிலையிலும் தனது இடக்கரத்தினால் இவர் இந்தச் சாதனையினை மேற்கொண்டு பலருக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.



- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #7 சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்



அருள்மிகு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஒருமுறை தமது ஆன்மீகச் சொற்பொழிவிற்கு மத்தியில் சபையோரை பார்த்து கேட்டார்.., "இப் பிரபஞ்சத்திலே முழுமுதற் கடவுள் யார் தெரியுமா?", என்று. அவர் கேட்ட கணத்திலேயே முன்வரிசையில் இருந்து விடலைப் பையன் ஒருவன் சட்டென எழுந்து சொன்னான் "சிவாஜி" என்று! சபையிலிருந்த அனைவரும் சிறுவனின் பதிலை கேட்டு சிரித்து பரிகாசம் செய்த போது..., வாரியார் சுவாமிகள் தமக்கே உரிய சமத்காரச் சிரிப்போடு "கரெக்ட்! பையன் சொல்வது சரிதானே! நீங்க ஏன் அதுக்கு சிரிக்கிறீங்க? உயர்ந்தவர்களை நாமெல்லாம் "ஜி" போட்டு தானே பேசறோம்! உதாரணமாக காந்திஜி... ராஜாஜி.. நேருஜி.. நேதாஜி.. இந்திராஜி.. இப்படி இல்லையா..! இதே போலத் தான் இந்தப் பையனும் முழுமுதற் கடவுளான சிவா என்னும் சிவபெருமானை "சிவாஜி" என்றான். சிவா பிளஸ் ஜி "சிவாஜி" தானே என்று சொன்னதும் சபையே அதிரும் வகையில் கரவொலி வானைப் பிளந்தது.

வாரியார் சுவாமிகள் தம் எதிரில் இருந்தவர்களின் மனோநிலையை யூகித்தவராகவே மேற்சொன்ன கேள்வியைக் கேட்டிருக்க வேண்டும். அவர் எதிர்பார்த்த பதிலும் கிடைக்கவே மிகுந்த உற்சாகத்தில் அச்சிறுவனின் பதிலையே தமது நாவன்மைக்கு பக்கபலமாக ஆக்கிக்கொண்டார். அந்த அளவிற்கு தனது நடிப்பாலும், பேச்சாலும் சிவன் வேடமிட்டு ஒரு பிஞ்சு உள்ளத்தில் கூட ஆழப்பதிந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தார் நமது நடிகர் திலகம் அவர்கள். நடிகர் திலகம் அவர்கள், "அருட்செல்வர்" ஏபி நாகராஜன் கதை - வசனம் எழுதி இயக்கிய "திருவிளையாடல்" படம் வெளி வந்த பின்பே முழுமுதற் கடவுள் சிவபெருமான் இப்படித்தான் இருப்பார் என்ற எண்ணம் எல்லோரது மனதிலும் ஆழமாகப் பதிந்துவிட்டது. அவ்வளவு தத்ரூபமாக அவருக்கு சிவன் வேடம் பொருந்தி விட்டது. சிவனுக்கு சிவாஜியின் வேடம் புரிந்து விட்டது என்றும் சொல்லிக் கொள்வோம்!

கடவுள் பெயரால் சிவன் விஷெஸ்ணுவாகவும் சிவனடியார்களான அப்பர், சுந்தரர் ஆகவும் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், இராமர், கிருஷ்ணன், வீரபாகு மற்றும் நாரதமுனிவர், விசுவாமித்திரர், என பல்வேறு தெய்வ ஆன்மீக பெரியார்களின் பாத்திரங்களை ஏற்று சைவ வைணவ சமயங்களின் அறம்சார்ந்த பெருமைகளை ஆன்மீக உலகில் நிலை நிறுத்தியவர் நமது நடிகர் திலகம் என்பது தமிழ் சினிமா மூலம் அவர் ஆற்றிய பெரும் தொண்டாகும். தமிழகத்தில் முக்குலத்தோரின் தெய்வத் தன்மை மிகுந்த தேசியத் தலைவரான பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் தேசியமும் ஆன்மீகமும் எனது இரு கண்கள் ஆகும் எனக் கூறியது போன்று அவர் மரபில் வந்த நமது நடிகர் திலகம் அவர்களும் ஆன்மீக பற்றாளராகவும், தேசபக்தி மிகுந்த கலைஞராகவும் சினிமா என்னும் ஊடகத்தினூடாக, தலைமுறை தலைமுறையாக பார்த்து உணரக்கூடிய தேசப்பற்றையும் இனமான விடுதலை உணர்வையும் ஊட்டி வைத்தவர் ஆவார்.

வெள்ளையரை எதிர்த்து கப்பம் கட்ட மறுத்த பாளையக்காரர்களுள் ஒருவரான கட்டபொம்முவை சிறுவனாக இருந்த போது தெருக்கூத்து நாயகனாக பார்த்து பார்த்து தன்னையும் இன்னுமொரு கட்டபொம்முவாக நினைத்து வளர்ந்ததால் தான் பின்னாளில் வீரபாண்டிய கட்டபொம்மனாகப் பரிணமித்தார். நடிகர் திலகம் அவர்களை உலகறிந்த வீரபாண்டிய கட்டபொம்மனாக உருவாக்கிய பெருமை மறைந்த தமிழறிஞரும் தமிழரசுக் கழகத் தலைவரும் இனமான பெரியாருமாகிய சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் கிராமணியார் அவர்களையே சாரும் என்றால் அது மிகையாகாது.

கட்டபொம்மன் பற்றி முரண்பாடான அபிப்பிராயங்கள் பேசப்பட்டாலும் சிவாஜி அவர்கள் தனது சுயசரிதையில் கூறியதாவது, (டாக்டர் டி. எஸ் நாராயணசுவாமி அவர்கள் தொகுத்த எனது சுயசரிதை) "அந்தக் காலத்தில் கம்பளத்தார் கூத்து என்று நடத்துவார்கள். அதில் கட்டபொம்மன் நாடகம் நடத்துவார்கள். அந்தப் கூத்து, எங்கள் வீட்டின் முன்பாக நடந்து கொண்டிருந்தது.

கம்பளத்தார் கூத்து என்றால் கட்டபொம்மன் நாடகத்தை மட்டும் தான் சொல்வார்கள். ஏனெனில் கட்டபொம்மனே கம்பளத்து நாயக்கர் தானே. கம்பளத்தார் 47வது தலைமுறையில் வந்தவன், 47 தலைமுறைக்கு முன்னால் தமிழ்நாட்டிற்குள் வந்தவர்கள் அவர்கள் நமது பாண்டியராஜா ஒருமுறை ஒரு பயில்வானை சுவீகாரம் எடுத்துக் கொண்டு கூடவே வைத்துக் கொண்டாராம். ஏனெனில் அந்த பயில்வான் பெரிய தீவிட்டி கொள்ளைக்காரர்களை பிடித்துக் கொடுத்து நாட்டு மக்களுக்கு நன்மை செய்தாராம். அந்தப் பரம்பரையில் வந்தவன் தான் வீரபாண்டியகட்டபொம்மன் அவன்தான் வெள்ளையனை எதிர்த்துப் போராடியதாக நான் சின்னப்பிள்ளையாக இருக்கும்போது எங்களுக்குச் சொல்லித் தந்தார்கள்.

இந்த கட்டபொம்மன் நாடகத்தை அதாவது தெருக்கூத்தை பார்த்து தான் நானும் கட்டபொம்மனாக வேடமிட்டு நடிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் ஆழமாக பதிந்து விட்டது. அது தான் பிற்காலத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனாக நான் நடித்து பெயரும் புகழும் பெற காரணமாயிற்று! தேச விடுதலைக்காக பேசியும் போராடியும் உயிர் நீத்த தியாகிகளான திருப்பூர் குமரன் (கொடிகாத்த குமரன்), பஞ்சாப் சிங்கம் பகத்சிங், கப்பலோட்டிய தமிழன் வ உ சி, தேசியக்கவி பாரதியார், மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜி, சாம்ராட் அசோகன் என பல்வேறு வேடங்களில் தோன்றி மக்கள் மத்தியில் நமது தேசியத் தலைவர்களையும் மாவீரர்களையும் அடையாளம் காட்டி அறிமுகம் செய்து வைத்ததும் சிவாஜி அவர்கள் செய்த பெரும் பணியாகும்.

"சுதந்திரப் போராட்டத் தியாகியாக ஏற்று நடித்த வேடங்களுள், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி.யாக வேடம் ஏற்று நடிப்பது என்பது ஒரு சவாலான காரியமாகும். தேசபக்தர் வா. உ. சி.யாக வேடமேற்று நடித்தது பற்றி "எனது சுயசரிதை" நூலில் சிவாஜி அவர்கள் கூறியதாவது, "நான் ஒரு தேசியவாதியின் மகன் சிறுவயது முதலே எனக்குள் தேசபக்தியும், தேசியமும் இருந்தது எனவே வ. உ. சியின் பாத்திரத்தில் கப்பலோட்டிய தமிழன் படத்தில் வேடத்தை நன்றாகவே செய்ய முடிந்தது."

நமது தமிழ்நாட்டில் தேசிய படங்கள் நிறையவே எடுத்துள்ளார்கள் அதில் அநேகமாக எல்லாவற்றிலும் நான் நடித்து இருக்கிறேன் இவைகள் குடியரசு தினம் சுதந்திர தினம் போன்ற தேசிய திருநாள் வரும் போதெல்லாம் திரையிலும் டிவியிலும் போடுவார்கள் என்னை பிடிக்கிறதோ இல்லையோ என் படங்களைத் தான் போடுவார்கள் வ. உ. சி அவர்களின் மகன் சுப்பிரமணியன் கப்பலோட்டிய தமிழன் படம் பார்த்துவிட்டு எனது தகப்பனார் மாதிரி அப்படியே இருக்கிறீர்களே என்றார் இதைவிட எனக்கு எந்த விருதும் பாராட்டும் தேவையில்லை தேசபக்தர்களை பற்றி படம் எடுத்தால் நஸ்டப்பட்டு விட்டோமே என்று கவலைப் படவில்லை திரைப்படம் மூலம் அந்த தேசபக்தர்களை மக்கள் நினைவு கூற ஒரு வாய்ப்பு அளித்தோம் என மகிழ்ந்தோம். மனநிறைவு பெற்றோம். அவர்களை நினைவு கூறும் போது என்னையும் மறக்காமல் இருக்கிறார்கள்". இதோ கப்பலோட்டிய தமிழன் படத்தில் இருந்து ஒரு காட்சி.



இக்காட்சியில் இடம்பெற்ற சோகம் பீறிடும் வரிகளை அடிக்கடி நான் பேசி பார்ப்பதுண்டு சென்னையில் சுதந்திரக் கவி சுப்பிரமணிய பாரதியார் மறைந்த செய்தி கேட்டு வ உ சி ஐயா (சிவாஜி) பிரிவுத் துயர் தொண்டையை அடைக்க, பாரதி ஐயா போய்விட்டாயா..? சுதந்திரம் வாங்காமல் சாகமாட்டேன்.. சுதந்திரம் வாங்காமல் சாகமாட்டேன்.. என்று அடிக்கடிச் சொல்வாயே, அதை எப்படி ஐயா மறந்தாய்! ஐயா எப்படி மறந்தாய்! நீதான் கம்பன் நான்தான் சோழன் என்று என்னை கேலி செய்வாய் ஐயா. அதையெல்லாம் விட்டுவிட்டு போய்விட்டாயே எப்படி மறந்தாய்? திலகர் மறைந்தார். அரவிந்தர் துறவியானார் நீ அமரர் ஆகிவிட்டாய் ஐயா.. எல்லோரும் என்னை தனிமரமாய் விட்டுவிட்டு சென்று விட்டீர்கள் ஐயா.. (குலுங்கி அழுதல்) உயிரை பிழிந்தெடுக்கும் காட்சி இது.

ஆகஸ்ட் 15 இந்திய தேசத்தின் 74 ஆவது சுதந்திர தினம் இந்நாளில் சுதந்திரப் போராட்ட வீரர் பலரை எம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி நினைவூட்டிய நடிகர் திலகம் அவர்களுடைய தேசபக்தியை வணங்கி சுதந்திர போராட்டத்தில் பங்கு கொண்ட அனைத்து தியாகிகளுக்கும் வந்தனை செய்வோம். வந்தே மாதரம்!

*காட்சிகள் விரியும்- அடுத்த வாரம்......*



Amma Brand

# இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!











LEASE TO OWN
$58.88
WEEKLY +TAX
2020 COROLLA L CVT
1.69% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year
LEASE TO OWN
$88
WEEKLY +TAX
2020 RAV-4 LE FWD
4.99% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year
USED CARS
COROLLA - 10 IN STOCK
From $10,600 + tax - 2012 & up
CAMRY - 10 IN STOCK
From $17,700 + tax - 2015 & up
RAV-4 - 15 IN STOCK
From $14,500 + tax - 2012 & up
SIENNA - 5 IN STOCK
From $30,363 + tax - 2017 & up
USED VEHICLES
HONDA
LEXUS
BMW
LAND ROVER
YORKDALE TOYOTA
3080 Dufferin Street
Toronto, ON M6A 2S6
Dufferin & Lawrence
www.yorkdaletoyota.com
NO CREDIT BAD CREDIT
NO PROBLEM!
LEASE TO OWN
$90
WEEKLY +TAX
2020 CAMRY SE
0% LEASE FOR 39 MONTHS, 20,000 km/year
FOR TONY SIVA'S CLIENTS!!!
$500 GAS CARD
GAS CARD
with every purchase of New or Used Vehicle
$0 DOWN on New or Used Vehicles
புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
Tony Siva
647-269-0749
tonymidtown@hotmail.com
www.yorkdaletoyota.com

# மேலதிகமான உள்ளூர் சமூக வணிகங்களும் சேவைகளும் மீண்டும் திறக்கப்படுவதனாலும், சமூகமாக ஒன்றுகூடும் நபர்களின் தொகை 10 ஆக அதிகரிப்பதனாலும், நாம் அனைவரும் ஒருவரையொருவர் பாதுகாக்கும் எமது முயற்சிகளைக் கண்டிப்பாகத் தொடர வேண்டும்.





**உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்**, இரண்டு மீட்டர் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்



உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலாக இருக்கும்போது, **முகக்கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளவும்.**



**தொடர்ச்சியாக அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளவும்**



உங்களுக்கு COVID-19 இருப்பதாக அல்லது அந்த வைரஸ் தாக்கத்துக்கு நீங்கள் முகம் கொடுத்திருப்பதாக எண்ணினால், **சோதனைக்கு உட்படவும்.**

**வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பாக இருந்து கொள்ளவும். உயிர்களைப் பாதுகாக்கவும்.**

ontario.ca/coronavirus ஐப் பார்வையிடவும்.
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# மாற்று மதத்தினருக்கும் நேசக்கரம்: கரோனாவால் உயிர் இழந்தோரை அடக்கம் செய்யும் இஸ்லாமிய அமைப்பு



கன்னியாகுமரி மாவட்டத்தில் கரோனாவால் உயிர் இழந்தவர்களை அவர்களது மதச்சடங்கின்படியே இலவசமாக அடக்கம் செய்து கொடுக்கின்றனர் பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பின் தொண்டர்கள்.

கரோனாவால் உயிர் இழந்தோர் மாநகர எல்லைப் பகுதிக்குள் இருந்தால் அவர்களது உடல் மாநகராட்சி ஊழியர்களால் மின் தகன மேடையில் எரியூட்டப்பட்டு வருகிறது. இதேபோல் கரோனாவால் உயிர் இழந்தோரின் உடலைச் சொந்த ஊர்களுக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்வதில் உறவினர்களே தயக்கம் காட்டும் நிலையில் பலரது உடலும் மின்தகன மேடையிலேயே எரியூட்டப்பட்டு வருகின்றன.அதேநேரம் உயிரிழந்தோர் உடலை தங்கள் பகுதிக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்ய விரும்பும் உறவினர்களுக்கு உதவும் வகையில் சேவை மனப்பான்மையோடு பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பினர் அடக்கம் செய்து கொடுக்கின்றனர்.

இதில் மாற்று மதத்தினரையும் அவர்கள் மத சம்பிரதாயப்படியே அடக்கம் செய்கின்றனர். இதுகுறித்து பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பின் கன்னியாகுமரி மாவட்டச் செயலாளர் சப்தார் அலி 'இந்து தமிழ்' இணையத்திடம் கூறுகையில், ''இந்தியா முழுவதும் எங்கள் அமைப்பினர் இந்த சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கரோனா நோயாளிகளை அடக்கம் செய்வது குறித்து மத்திய அரசு வெளியிட்டிருக்கும் வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றித்தான் அடக்கம் செய்கிறோம். குமரி மாவட்டத்தில் இரண்டு கிறிஸ்தவர்களின் உடலைஅடக்கம் செய்யக் கேட்டு அழைப்பு வந்தது. அவர்களது உடலை அவர்கள் மத சம்பிரதாயப்படியே அடக்கம் செய்து கொடுத்தோம்.எங்கள் அமைப்பின் சார்பில் நூறுபேர் இதில் தன்னார்வலர்களாக இணைந்திருக்கிறார்கள். பத்துக் குழுக்களாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறோம்.

கரோனாவால் இறந்தவர்களை அடக்கம் செய்ய சில விதிமுறைகள் உள்ளன. முதலில் 12 அடி ஆழத்துக்குக் குழி தோண்ட வேண்டும். அதில் சுகாதாரத்துறை அதிகாரிகள் வந்து பிளீச்சிங் பவுடர் போடுவார்கள். அடக்கம் செய்யச் செல்லும் நாங்கள் முழு உடல் கவசம், கையுறை, கால் உறை, முகத்துக்கு வெளியே கண்ணாடி மாஸ்க் என முழுக்க மூடிய நிலையிலேயே இருப்போம். 12 அடி ஆழக் குழிக்குள் துணியைக் கொண்டுதான் உடலை உள்ளே இறக்குவோம்.அடக்கம் செய்து முடித்ததும் நாங்கள் அணிந்திருக்கும் உடைகளை அங்கேயே போட்டு எரித்துவிடுவோம். தொடர்ந்து மஞ்சளும், உப்பும் சேர்ந்த தண்ணீரில் நன்றாகக் குளித்துவிட்டு கொண்டு வந்திருக்கும் மாற்று உடைக்கு மாறுவோம். இதேபோல் அடக்கம் செய்யும் குழுவில் இருப்பவர்கள் வீடுகளுக்குப் போனதும் முதல் மூன்று நாள்களுக்கு அவர்களே, அவர்களை தனிமைப்படுத்திக் கொள்வர். அதற்குள் ஏதாவது அறிகுறி தென்பட்டால் கரோனா சோதனை செய்து கொள்ளவேண்டும். குழுவில் நாங்கள் தகுந்த முன்னெச்சரிக்கையோடு செயல்படுவதால் எங்களில் யாரையும் இதுவரை கரோனா தொற்றவில்லை.

குமரி மாவட்டத்தில் சுனாமி தாக்கியபோதும், ஒக்கி புயல் வந்தபோதும் இப்படியான மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். ஆனால் அதில் இருந்து இது முற்றாக மாறுபட்ட அனுபவமாக இருக்கிறது. எங்கள் இல்லங்களில்கூட முதலில் பயந்தார்கள். அதன்பின்பு, இந்த நெருக்கடியான நேரத்தில் மக்களுக்கு இதைவிடப் பெரிதாக நம்மால் எதைச் செய்துவிட முடியும்? எனக்கேட்டு எங்களின் சேவையில் அவர்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள்'' என்றார்.

## அயோத்தி பூமி பூஜையில் கம்பராமாயணத்தை மேற்கோள் காட்டிய பிரதமர் மோடி



அயோத்தி ராமர் கோவில் பூஜை அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய பிரதமர் மோடி, கம்ப ராமாயணத்தை மேற்கோள் காட்டினார்.

அயோத்தி ராமர் கோவில் கட்டுவதற்கான பூமி பூஜை இன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில் உ.பி. முதல் மந்திரி யோகி ஆதித்யநாத், கவர்னர் ஆனந்தி பென் படேல், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத், ராமர் கோவில் அறக்கட்டளை நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் பிரதமர் மோடி பேசியதாவது:வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவிற்கு என்னை அழைத்ததற்கு நன்றி. உலகம் முழுவதும் ராமர் பக்தி கீதங்கள் ஒலிக்கின்றன. குமரி முதல் நாடு முழுவது ராமர் நாமம் ஒலிக்கிறது.

பல வருட காத்திருப்பு இன்று முடிவுக்கு வந்துள்ளது. ராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டதன் மூலம் அயோத்திக்கு விடுதலை கிடைத்துள்ளது.

தமிழில் கம்ப ராமாயணம் உள்ளது போல் பல்வேறு மொழிகளிலும் ராமாயணம் உள்ளது. ராமர் அனைவருக்கும் சொந்தமானவர். நேபாளத்துக்கும் ராமருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொடர்பு உள்ளது.

ராமர் கோவில் கட்டுவதால் மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். ராம ராஜ்ஜியமே மகாத்மா காந்தியின் கனவாக இருந்தது என தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் அதிகபட்சமாக தமிழகத்தில் தான் கொரோனாவுக்கு 43 மருத்துவர்கள் உயிரிழப்பு

நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மருத்துவர்களில் அதிகபட்சமாக தமிழகத்தில்தான் 43 பேர் உயிரிழந்துள்ளனர்.தமிழகத்தில் கொரோனாவின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் மட்டுமின்றி கொரோனா நோய் பரவல் தடுப்பு பணியில் ஈடுபட்டு வரும் அரசு அலுவலர்கள், ஊழியர்கள், சிகிச்சை அளித்து வரும் டாக்டர்கள், செவிலியர்கள், ஊழியர்களும் பாதிப்புக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களில் சிலர் சிகிச்சை பலனின்றி பரிதாப மாக இறந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மருத்துவர்களில் அதிகபட்சமாக தமிழகத்தில்தான் 43 மருத்துவர்கள் உயிரிழந்துள்ளதாக இந்திய மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது. தமிழகத்திற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிராவில் 23 பேரும், குஜராத்தில் 20 பேரும், பீகாரில் 15 பேரும், டெல்லி, கர்நாடகாவில் தலா 12 பேரும், ஆந்திரா மற்றும் உ.பி.யில் தலா 11 பேரும் உயிரிழந்துள்ளனர்.இந்தியாவில் இதுவரை கொரோனாவுக்கு 175 மருத்துவர்கள் உயிரிழந்துள்ளதாக இந்திய மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

# வெளிநாடுகளில் வேலை இழந்தோருக்குத் தலா ரூ.5 ஆயிரம் நிதியுதவி: கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு

வெளிநாடுகளில் வேலை இழந்தோருக்கு உதவ, அவர்களுக்குத் தலா ரூ.5 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட உள்ளதாகக் கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.கேரள முதல்வர் பினராயி விஜயன் இன்று (புதன்கிழமை) திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:''கேரளாவில் இன்று 1,195 பேருக்குக் கரோனா தோற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. திருவனந்தபுரம் மாவட்டத்தில்தான் மிக அதிகமாக இன்று 274 பேருக்கு நோய் பரவியுள்ளது.

இன்று நோய் பாதிக்கப்பட்டவர்களில் 125 பேர் வெளி மாநிலங்களில் இருந்தும், 66 பேர் வெளிநாடுகளில் இருந்தும் வந்தவர்கள் ஆவர். சுகாதாரத் துறையைச் சேர்ந்த 13 பேருக்கு நோய் பரவியுள்ளது. கரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்ததன் மூலம் 971 பேருக்கு நோய் பரவி உள்ளது. இதில் 79 பேருக்கு நோய் எப்படி, எங்கிருந்து பரவியது எனத் தெரியவில்லை.இன்று கேரளாவில் 7 பேர் கரோனா பாதித்து மரணமடைந்துள்ளனா. கோழிக்கோட்டைச் சேர்ந்த 66 வயதான புருஷோத்தமன், 73 வயதான பிரபாகரன், 70 வயதான மரக்கார் குட்டி, கொல்லத்தைச் சேர்ந்த 58 வயதான அப்துல் சலாம், கண்ணூரைச் சேர்ந்த 59 வயதான யசோதா, காசர்கோடைச் சேர்ந்த 76 வயதான அசைனார் ஹாஜி, எர்ணாகுளத்தைச் சேர்ந்த 83 வயதான ஜார்ஜ் தேவசி ஆகிய 7 பேர் கரோனா பாதித்து மரணம் அடைந்துள்ளனர்.

இதையடுத்துக் கேரளாவில் கரோனா பாதிப்பால் மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 94 ஆக உயர்ந்துள்ளது.இன்று நோய் பாதிக்கப்பட்டவர்களில் திருவனந்தபுரத்திற்கு அடுத்தபடியாக 167 பேர் மலப்புரம் மாவட்டத்தையும், 128 பேர் காசர்கோடு மாவட்டத்தையும், 120 பேர் எர்ணாகுளம் மாவட்டத்தையும், 108 பேர் ஆலப்புழா மாவட்டத்தையும், 86 பேர் திருச்சூர் மாவட்டத்தையும், 61 பேர் கண்ணூர் மாவட்டத்தையும், 51 பேர் கோட்டயம் மாவட்டத்தையும் , தலா 39 பேர் கோழிக்கோடு மற்றும் இடுக்கி ஆகிய மாவட்டங்களையும், 41 பேர் பாலக்காடு மாவட்டத்தையும், 37 பேர் பத்தனம்திட்டா மாவட்டத்தையும், 30 பேர் கொல்லம் மாவட்டத்தையும், 14 பேர் வயநாடு மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று 1,234 பேர் நோயிலிருந்து குணமடைந்துள்ளனர். இதையடுத்து இதுவரை குணமடைந்த வர்களின் எண்ணிக்கை 17,537 ஆக உயர்ந்துள்ளது. தற்போது 11,492 பேர் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கேரளாவில் பல்வேறு மாவட்டங்களில் 1,47,974 பேர் கண்காணிப்பில் உள்ளனர். இவர்களில் 1,36,807 பேர் வீடுகளிலும், 11,167 பேர் மருத்துவமனைகளிலும் உள்ளனர். இன்று நோய் அறிகுறிகளுடன் 1,444 பேர் பல்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.கடந்த 24 மணி நேரத்தில் 25,096 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. சிபிநாட், ட்ரூநாட் உள்பட இதுவரை பல்வேறு வகையான 8,84,056 பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 6,444 பரிசோதனை முடிவுகள் இன்னும் வர உள்ளன. இது தவிர சுகாதாரத்துறை ஊழியர்கள் மற்றும் வெளிமாநிலத் தொழிலாளர்கள் உள்பட சமூக நெருக்கமுள்ள 1,30,614 பேருக்குப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இதில் 1,950 பேரின் பரிசோதனை முடிவுகள் இன்னும் வர உள்ளன. கேரளாவில் தற்போது 515 நோய்த் தீவிரம் உள்ள பகுதிகள் உள்ளன.கேரளாவில் கடந்த சில தினங்களாக நோய் பரவும் வேகம் மிகவும் அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாகக் கரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருப்பதன் மூலம் நோய் பரவுவது அதிகரித்து வருகிறது. இன்றும் திருவனந்தபுரம் மாவட்டத்தில்தான் மிக அதிகமானோருக்கு நோய் பரவி உள்ளது. இன்று நோய் பாதிக்கப்பட்ட 274 பேரில் 248 பேருக்குக் கரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்ததன் மூலம் நோய் பரவியுள்ளது.

பூந்துறை மற்றும் விழிஞ்சம் ஆகிய பகுதிகளில் நோய்ப் பரவல் சற்று குறைந்துள்ளது. ஆனாலும் இப்பகுதிகளில் ஆபத்தான நிலை இன்னும் தொடர்கிறது.நோய்ப் பரவல் அதிகரித்துள்ளதால் நோய் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் காவல் துறையையும் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையினருக்கு உதவுவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையின் பணியை அவர்கள் மட்டுமே செய்வார்கள். கரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்தவர்களை எளிதில் கண்டுபிடிக்க போலீஸாரால்தான் முடியும். எனவேதான் அந்தப் பொறுப்பு போலீஸ் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.வெளிநாடுகளில் இருந்து வேலை இழந்தவர்களுக்கு உதவுவதற்காக, அவர்களுக்குத் தலா ரூ.5,000 நிதியுதவி கொடுக்க இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது''.இவ்வாறு பினராயி விஜயன் கூறினார்.


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

மலேசிய மடல்:

# கொரோனா காலமும் உடன் பருமன் சிக்கலும்

கோலாலம்பூர், ஆகஸ்ட் 06:

'ஆசியான்' கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள மலேசியா, சிங்கப்பூர், இந்தோ-னேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, புருணை, மியன்மார், கம்போடியா, லாவோஸ், வியட்னாம் ஆகிய நாடுகளில் உடல் பருமன் சிக்கலை சற்று அதிகமாக எதிர்கொண்டுள்ள நாடு மலேசியா.

இந்தச் சுழலில் கொடிய ஆட்கொல்லி கிருமியான கோவிட்-19 தாக்கத்தால் 18 வயதுக்குட்பட்ட இளையோர் மத்தியில் இந்தச் சிக்கல் பரவலான அளவில் பிரதிபலிப்பதாக மலேசிய சுகாதாரத் துறையைச் சேர்ந்த சிறப்பு அதிகாரி டாக்டர் அருணா சந்திரன் தெரிவித்தார்.




இதற்கு குடும்ப பாரம்பரியம், சுற்றுச்சூழல் என்றெல்லாம் பல்வேறு காரணம் சொல்லப்பட்டாலும் பெற்றோரின் அலட்சியமும் வாழ்க்கை முறையும்தான் முக்கியமான அம்சங்களாகும்.

குழந்தைப் பருவத்தினர் முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் வரை எந்த அளவுக்கு உடல் பருமனாகவும் அதிக எடையுடனும் காணப்படுகின்றனர் என்பது குறித்த ஆய்வை மலேசிய சுகாதாரத் துறை அவ்வப்பொழுது மேற்கொண்டு வருகிறது.

இந்தச் சிக்கலால் பாதிக்கப்படும் சிறார் விகிதாச்சாரம் 2006-ஆம் ஆண்டில் 5.4 விழுக்காடாக இருந்தது. 2011-ஆம் ஆண்டளவில் 6.1மூ என்ற கட்டத்தை எட்டியது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இது ஏறக்குறைய இரட்டிப்பானது. நோய்ப் பரவல் மற்றும் உடல் பருமன தொடர்பாக மலேசிய சுகாதாரத் துறை 2019-இல் மேற்கொண்ட ஆய்வில் கிடைத்த புள்ளிவிவரத் தரவின் அடிப்படையில் இந்த அளவு 15 விழுக்காட்டை எட்டியது. இது, சற்று கவலைக்குரிய விடயம் என்று மருத்துவர் அருணா சொன்னார்.

சின்ன வயதில் பிள்ளைகள் உடல் பருமனாக இருப்பது அழகு என்று ஒரு சில பெற்றோரும், உரிய வயதை எட்டியதும் அவர்களே சரிசெய்துக் கொள்வார்கள் என மற்றும் சில பெற்றோரும் கருதிக் கொள்ளும் போக்கு பரவலாக காணப்படுகிறது.

சிறுவர்களாக இருந்தாலும் உடல் பருமன் பிரச்சினையால், உடல் ரிதியாகவும் மனதளவிலும் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதுதான் உண்மை. குறிப்பாக, கல்விச் சாலைகளில் சக மாணவர்களாலும் மற்ற தரப்பினராலும் கேலிக்கு ஆளாவதுண்டு. சிற்சில வேளைகளில், பகடிவதை என்ற கட்டத்தைக்கூட இது எட்டுவதுண்டு.




இதைத் தவிர தாழ்வு மனப்பான்மையும் ஏற்படும். இதனால், சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் கல்வி நலம்கூட பாதிக்கப்படலாம்.

பொதுவாக ஓய்வு நேரங்களில் பிள்ளைகள் ஓடி ஆடவும் விளையாடவும் அனுமதிக்க வேண்டும். திருமணம் உள்ளிட்ட பொது நிகழ்ச்சிகளில் முன்பெல்லாம் பிள்ளைகள் சலிப்பு தட்டும் அளவுக்கு குறுக்கும் நெடுக்குமாக ஓடிப் பிடித்து விளையாடுவார்கள். இப்பொழுதெல்லாம் விவேகத் தொலைபேசியுடன் ஒரு மூலையில் அல்லது நாற்காலியில் முடங்கிவிடும் போக்கை பரவலாகக் காண முடிகிறது.



நக்கீரன்

பொதுவாக இன்றைய காலக் கட்டத்தில் பிள்ளைகளின் படிப்பில்தான் பெற்றோர் முழு அக்கறை காட்டுகின்றனரே அன்றி, பிள்ளைகளின் உடல் இயக்கம், உடற்பயிற்சி குறித்து அந்த அளவிற்கு முனைப்பு காட்டுவதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, பெரியவர்கள் சாப்பிடும் அளவுக்கு பிள்ளைகளுக்கும் உணவு பரிமாறும் போக்கை பொதுவாகக் காணமுடிகிறது. தவிர, உணவு விடயத்தில் பெற்றோரின் தரப்பில் பிள்ளைகளின் மீது வைக்கப்படும் பொதுவான குற்றச்சாட்டு, 'பிள்ளைகள் காய்கறிகளை சாப்பிடுவது இல்லை' என்பதுதான். இது உண்மையும்கூட.

இதற்கு இன்றைய நாகரிக உணவுப் பழக்கம் அடிப்படைக் காரணம் ஆகும். மேகி, பர்கர், பீஸா போன்ற துரித உணவுக் கலாச்சாரம் தொற்றிக் கொண்டுள்ள இன்றைய வாழ்க்கை முறையில், ஒவ்வொரு விட்டிலும் ஒவ்வொரு தனித்தன்மை இருக்கும். அதற்கு ஏற்ப பிள்ளைகளின் மனதைக் கவரும் விதத்திலும் காய்கறிகளின்மீது ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலும் உணவைப் பரிமாற வேண்டும். அதற்கான வித்தையையும் சாகசத்தையும் பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒருசில பொழுதுகளில் கண்டிப்பை வெளிப்படுத்தலாம். அத்துடன், ஒன்றைக் கொடுத்து இன்னொன்றைப் பெறும் வர்த்தகப் பாணியையும் பெற்றோர் கடைப்பிடிக்கலாம்.



யார் அதிகமான காய்கறியை உண்கிறார்களோ அவர்களுக்கென ஒரு பரிசுப் பொருளைத் தரலாம். இந்த விடயத்தில் பிள்ளைகளுக்கு இடையே ஒரு போட்டி மனப்பான்மையை தந்திரமாக ஏற்படுத்தலாம் என்றெல்லாம் பெற்றோருக்கு ஓர் ஆசிரியைப்போல யாவரும் நலம் என்னும் நிகழ்ச்சிவழி வானொலியின் ஆலோசனை வழங்கினார் டாக்டர் அருணா சந்திரன்.

இந்த வேளையில், தாய்ப்பாலின் முக்கியத்துவம் குறித்தும் அவர் விவரித்தார்.

எந்த வேலை செய்தாலும் எத்தகைய வாழ்க்கை முறையை மேற்கொண்டாலும் பொன்னான உணவான தாய்ப்பாலை குழந்தைப் பிறந்தது முதல் குறைந்தது 180 நாட்களுக்கு புகட்டுவதைப் பற்றி கர்ப்ப காலத்தில் இருந்தே அனைத்து பெற்றோரும் திட்டமிட வேண்டும். குறிப்பாக ஒவ்வொரு தாயும் இதுகுறித்து சிந்திக்க வேண்டும் என்று தாய்ப்பால் வாரம் கடைப்பிடிக்கப்படும் இந்த நேரத்தில் எடுத்துரைத்தது பொருத்தமாக அமைந்தது.

குழந்தை வளர்ப்பும் தாய்ப்பால் புகட்டுவதும் எல்லாத் தாய்மாருக்கும் இயல்பாக அமைவதில்லை. சில பெண்களுக்கு போராட்டமாகவும் அமையக் கூடும். அதைச் சமாளித்து வென்று விட்டால், பிள்ளைகள் ஆரோக்கியமாகத் திகழ்வர் என்பதுடன், உடல் பருமன் சிக்கலையும் ஓரளவு தவிர்க்கலாம் என்றார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கொரோனா பாதிப்பு நிலவும் இந்தக் காலக்கட்டத்தில் பிள்ளைகளின் நடமாட்டம் மிகவும் குறைந்துவிட்டது. அவர்கள் வீட்டில் இருந்தே உடற்பயிற்சி செய்ய ஊக்குவிப்பதுடன் பெற்றோரும் அவர்களுடன் இணைந்து அவர்களை ஊக்கப்படுத்தலாம். பூச்செடிகள் மற்றும் அலங்கார தாவராங்களை வீட்டில் பராமரிக்க கற்றுக் கொடுக்கலாம் என்றெல்லாம் ஆலோசனை வழங்கினார் டாக்டர் அருணா சந்திரன்.

*நக்கீரன் - Nakkeeran 013-244 36 24*




SCARBOROUGH ASTROLOGER & PSYCHIC

OM SHAKTI ASTROLOGER & PSYCHIC

Master: KALI

9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS

REMOVES BLACK MAGIC, JADOO, VODOO, OBEYA, BUTTU, JINN & GIVES N100% PROTECTION



VEDIC SOLUTIONS AVAILABLE FOR:

* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

100% Guarantee

He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy

PRIVATE & CONFIDENTIAL

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Pandit: Gabbar Vishnu சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

100% Guarantee

Private & Confedential

2697 Eglinton Ave E, Scarborough ON
Next to CIBC Bank (BRIMLEY & EGLINTON)

437-217-3345



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 907



## மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்

### - கொழும்பு -

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டதோடு, பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில், அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரச-ின் வழிகாட்டல்களை ஏற்று பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகயாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரோனா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்'
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.


இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடுநாமும் நலமடைந்து உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.

காளி கருமை நிறங்கொண்டவளாகச் சினக்குறிப்போடு, கடைவாய்ப்புறம் கோரைப்பற்களுடன் காணப்படுவாள். துலை, சுடர்முடி அமைப்பிலே காணப்படும். பத்ரகாளி அன்னையின் திருக்கரத்திலே கேடயம், தலையோடு கூடிய முத்தலை ஈட்டி, கத்தி, உடுக்கை, தொங்கும் மனிதத்தலை, பாசம், மணி, ஈட்டி, அங்குசம் போன்ற படைக்கலங்களுள் சிலவோ, அன்றிப் பலவோ கைகளின் எண்ணிக்கைக்கேற்பக் காணப்படும். சில திருவுருவங்களில் சங்கு சக்கரமும் காணப்படும். காளி சிம்மவாகனத்தை உடையவளாக, அலகைக் கொடியாகக் கொண்டு சூலத்தைப் படையாகக் கொண்டு காட்சி தருவாள். ஊர்த்தெய்வமாகக் கருதப்படும் காளியைக் காளிஆச்சி, காளிஆத்தாள் என்றெல்லாம் உரிமையோடு அழைத்து வேண்டும் வரங்களைப் பெறுவர்.

இவ்வாறான பத்ரகாளியை வழிபட்டுக் குளிர்க்கஞ்சி வார்த்து நோய் பிணிகளிலிருந்து விடுதலை பெற்றவர்களாக அன்னையைப் போற்றி வழிபட்ட மக்கள் விளங்கினர். இவ்வேளையிலே நெசவுத்தொழிலில் ஈடுபட்டிருந்த கேரளம், தமிழகம் ஆகியவற்றைச் சேர்ந்த மக்களோடு, நெசவுத்தொழிலில் உள்ளூர்ப் பெரும்பான்மையின மக்கள் பெருமளவில் சேர்க்கப்பட்டனர். நாளடைவில் இத்தொழிலில் பெரும்பான்மையின மக்களே ஈடுபடுத்தப்பட்டுக் கடல்கடந்து நெசவுத் தொழிலுக்காக அழைத்துவரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள், தாயகத்திற்குத் திரும்ப வேண்டியநிலை காணப்பட்டது. இக்காரணத்தினால் இந்திய மக்கள் வாழ்ந்த பழைய குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டு புதிய இரட்டைமாடித் தொடர்வீடுகள் அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட புதிய வீடுகளுள் ஓர் அறைக்குள் ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலயம் மாற்றப்பட்டது.

இவ்வாறு மாற்றம் செய்ய்ப்பட ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்தைத் திரு. ஏகாம்பரம் கங்காணி என்பவர் தலைமை தாங்கி நடத்தி வந்தார். தொடர்ந்து இவருக்குப்பின் திரு. இரத்தினவேலு முதலியார் பரிபாலனம் செய்து வந்தார். இவர்க-ளின் பின் திரு. சிவப்பிரகாசம் பேராயிரம் உடையார் அவர்கள் தலைமையேற்று ஆலய பரிபாலனத்தைச் சிறப்புற நடத்தி வந்துள்ளார். இவரது காலத்திலே ஆலயத்திலே பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இளைய தலைமுறையினர் ஆலய பரிபாலனத்திலே இடம்பெற்றனர். இவர்களது வருகையால் ஆலயப் பணிகள் சிறப்புற நிறைவேற்றப்பட்டது. இவர்கள் அனைவரதும் முயற்சியால் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சிவராத்திரிவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இவ்வாறான விழாக்கள் மூலம் ஆலயத்தைப் பரிபாலித்து வந்த சபைக்கு ஈ.பி.சுப்ரமணியம் என்பவர் புதிய தலைவராகப் பதவியேற்று ஆலயத்திலே பல மாற்றங்களை கொண்டுவந்தார். இவரது முயற்சியின் காரணமாக 1977 ஆம் ஆண்டு, ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலய முன் மண்டபம் அரசாங்கத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்டது.

*வளரும்...*

TORONTO ASTROLOGER & PSYCHIC

Pandit: ARJUN

9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS



VEDIC SOLUTIONS AVAILABLE FOR:

* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

100% Guarantee

He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy

PRIVATE & CONFIDENTIAL

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit: Arjun** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்



- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

அகோரா சாமயாாகளடம ஸெனறு மநதுரஙகள கறறு ஸகாணட ஓம பரகாஷ

2607 Eglinton Ave East, Scarborough ON, M1K 2S2
UPSTAIRS ERA SUPERMARKET , (BRIMLEY & EGLINTON)

Call: 416-722-9498

# இவ்வார ராசிபலன்

**07-08-2020 வெள்ளி தொடக்கம் 13-08-2020 வியாழன் வரையும்**

**மேஷம்:** வீரியத்தோடு செயல்பட்டு வெற்றிகளை ஈர்த்துக் கொள்ளக்கூடிய வாரம்: புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப் போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். மங்களமான திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். வழிபடவேண்டிய தெய்வம்: விக்ன விநாயகர்
அதிர்ஷ்ட எண்: 9,7,4,0, அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,G

**ரிஷபம்:** எடுத்தகாரியத்தில் தொடுத்த வெற்றியை அடுத்தடுத்து சந்திக்கக்கூடிய வாரம்: மகிழ்ச்சியான வெற்றி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். செலவுகள் அதிகமாகும் திடீர் செலவு ஏற்படும் நட்பில் பிரிவு ஏற்படும் தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுபடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன்தரும். பேச்சில் பணிவு தேவை. காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: கந்தப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,4,6,7
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,X

**மிதுனம்:** ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கக் கூடிய உன்னதமான வாரம்: மனம் மகிழும் நாள். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத் தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் கூடும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு ஏற்படும். நீண்டநாள் கனவு நிறைவேறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன்
அதிர்ஷ்ட எண்: 3,2,6,9, அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,S

**கடகம்:** புதிய வாய்ப்புகளால் பெரிய சிறப்புக்கள் சேரக்கூடியவாரம்: நிதானத்தோடு செயல்பட வேண்டும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத் தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஐஸ்வரிய பெருமாள், அதிர்ஷ்ட எண்: 1,0,3,5
அதிர்ஷ்ட நிறம்: கருமை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,B

**சிம்மம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய நேர்த்தியான வாரம்: மனித நேயம் மிகுதியாகும். வீண் செலவு ஏற்படும். விவேகம் வெளிப்படும். வெளியூர் பயணம் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன் தொல்லை நீங்கும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். வழிபடவேண்டிய தெய்வம்: விஷ்ணு பகவான்
அதிர்ஷ்ட எண்: 6,2,3,8, அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,L

**கன்னி:** உள்ளத்தில் மகிழ்ச்சியும், இல்லத்தில் வளர்ச்சியும் உண்மையாகக் கிடைக்ககூடிய நன்மையான வாரம்: நீண்ட நாள் கனவு நிறைவேறும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத் தொழில் கவனம் தேவை. தொழிலில் லாபம் உண்டு. வழிபடவேண்டிய தெய்வம்: யோகநரசிம்மர்
அதிர்ஷ்ட எண்: 9,0,9,1, அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,W

**துலாம்:** ஏற்றமும் மாற்றமும் நிறைந்த எதார்த்தமான வாரம்: தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும்.விவசாயம் பலன் அளிக்கம். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவியார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,0
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,A

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நிகழ்ச்சியும், மனம் எதிர்பார்த்த வளர்ச்சியும் கிடைக்கும் வாரம்: விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,1,7,6
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Y

**தனுசு:** பெத்தவங்களோட வாழ்த்தும், மத்தவங்களோட மரியாதையும் கிடைக்கும் வாரம்: நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. சிறப்புகள் சேரும். வெறுப்புக்கள் அகலும். பங்குச் சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. பயணம் அனுகூலம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். சுயநலம் கூடும். வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மதேவர்.
அதிர்ஷ்ட எண்: 4,1,1,9, அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,U

**மகரம்:** நண்பர்களால் பணவரவும், சொந்தங்களால் மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம்: திட்டங்கள் வெற்றி பெறும். உழைப்புகள் கடுமையாக இருக்கும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வணிகத் தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். நட்பு வட்டம் விரிவடையும் சுபச் செய்தி வந்து சேரும்.கனவுகள் நினைவாகும். சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு. திருஷ்டிகள் விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிசேஷர், அதிர்ஷ்ட எண்: 8,3,0,2
அதிர்ஷ்ட நிறம். குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,A

**கும்பம்:** பிரயாணத்தின் மூலமாக பிரபல்யம் கிடைக்கக்கூடிய பெருமையான வாரம்: சந்தோஷம் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத் தேவைகள் அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை.தொலைப்பேசி தகவல் தெந்தரவு ஏற்படுத்தும். புண்ணியஸ்தளங்களுக்கு செல்வீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் பலன் தரும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,C

**மீனம்:** நன்மையான வி'யங்களை உண்மையாக சந்திக்கக்கூடிய நல்ல வாரம்: மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். போதாத காலம் விலகும். தோதான எண்ணங்கள் உருவாகும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும்.குழப்பங்கள் நீங்கும். மன நிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். வம்பு தும்புகள் தேடி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்ரத்தாழ்வார், அதிர்ஷ்ட எண்: 5,1,9,2
அதிர்ஷ்ட நிறம். இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,E




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377



# அன்பின் தொனி - 572

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனுமாயிருக்கிறார்.**

என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும் என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக் கலமுமாயிருக்கிறார். துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன், அதனால் என் சத்துருக்களுக்கு நீங்க லாகி இரட்சிக்கப்படுவேன். மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது. பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டது, மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது. எனக்கு உண்டான நெருக்கத் திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன், தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று. அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது, அவர் கோபங்கொண்டபடியால் பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது. அவர் நாசியிலிருந்து புகை எழும் பிற்று, அவர் வாயிலிருந்து பட்சிக்கிற அக்கினி புறப்பட்டது, அதனால் தழல்மூண்டது. வானங்களைத் தாழ்த்தி இறங்கினார், அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது. கேருபீன்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார், காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார்.. இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார், கரும்புனல்களையும், ஆகாயத்துக் கார்மேகங்களையும் தம்மைச் சூழக்கூடாரமாக்கினார். அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் அவருடைய மேகங்கள் பறந்து விலகிற்று, கல்மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது. கர்த்தர் வானங்களிலே குமுறினார், உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார், கல் மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது. தம்முடைய அம்புகளை எய்து, அவர்களைச் சிதறடித்தார், மின்னல்களைப் பிரயோகித்து, அவர்களைக் கலங்கப்பண்ணினார். அப்பொழுது கர்த்தாவே, உம்முடைய கண்டிதத்தினாலும் உம்முடைய நாசியின் சுவாசக்காற்றினாலும் தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது. உயரத்திலிருந்து அவர் கைநீட்டி, என்னைப் பிடித்து, ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்.
**- சங்கீதம் 18: 1-16**

**கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதிலளித்தார்.**

என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித் தார். என் ஆபத்துநாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள்ளூ கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார். அவர் விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து, என்மேல் பிரியமாயிருந்தபடியால், என்னைத் தப்புவித்தார். கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப் பதிலளித்தார், என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார். கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டுவந்தேன், நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை. அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன், அவருடைய பிரமாணங்களை நான் தள்ளிப்போடவில்லை. அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக்காத்துக்கொண்டேன். ஆகையால் கர்த்தர் என் நீதிக்கும், தம்முடைய கண்களுக்கு முன்னிருக்கிற என் கைகளின் சுத்தத்திற்கும் தக்கதாக எனக்குப் பலனளித்தார். தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும், புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபா டுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர். தேவரீர் சிறுமைப்பட்ட ஜனத்தை இரட்சிப்பீர், மேட்டிமையான கண் களைத் தாழ்த்துவீர். தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார். உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன், என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.
**- சங்கீதம் 18: 17-29**

**கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்?**

தேவனுடைய வழி உத்தமமானது, கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது, தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடக மாயிருக்கிறார். கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்? என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே. அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போகலாக்கி, என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார். வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார். உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர், உம்முடைய வலது கரம் என்னைத் தாங்குகிறது, உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும். என் கால்கள் வழுவாதபடிக்கு, நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர். என் சத்துருக்களைப் பின் தொடர்ந்து, அவர்களைப் பிடிப்பேன், அவர்களை நிர்மூல மாக்கும் வரைக்கும் திரும்பேன். அவர்கள் எழுந்திருக்கமாட்டாதபடிக்கு, என் பாதங்களின்கீழ் விழத்தக்கதாக அவர்களை வெட்டினேன். யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி, என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர். நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக, என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் கூப்பிடுகிறார்கள், அவர்களை இரட்சிப்பார் ஒருவருமில்லை, கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்களுக்கு அவர் உத் தரவு கொடுக்கிறதில்லை. நான் அவர்களைக் காற்றுமுகத்திலே பறக்கிற தூளாக இடித்து, தெருக்களிலுள்ள சேற்றைப்போல் அவர்களை எறிந்துபோடுகிறேன். ஜனங்களின் சண்டைகளுக்கு நீர் என்னைத் தப்புவித்து, ஜாதிகளுக்கு என்னைத் தலை வனாக்குகிறீர், நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள். அவர்கள் என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்கள், அந்நியரும் எனக்கு இச்சகம்பேசி அடங்குகிறார்கள். அந்நியர் முனைவிழுந்துபோய், தங்கள் அரண்களி லிருந்து தத்தளிப்பாய்ப் புறப்படுகிறார்கள். கர்த்தர் ஜீவனுள்ளவர், என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக, என் இரட் சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக. அவர் எனக்காகப் பழிக்குப் பழிவாங்கி, ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிற தேவனானவர். அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர், எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள்மேல் என்னை நீர் உயர்த்தி, கொடுமையான மனு'னுக்கு என்னைத் தப்புவிக்கிறீர். இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக் குள்ளே உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன். தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளித்து, தாம் அபி'ேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார். **- சங்கீதம் 18: 30-50**

*தொடரும்...*

# 30ம் ஆண்டு நினைவஞ்சலி

## திரு. அன்ரன் பேர்ட்டி எதிர்வீரசிங்கி




கண்முன்னே வாழ்ந்தகாலம், கனவாகிப் போனாலும்
எமமுன்னே உங்கள் முகம் என்நாளும்
உங்கள் முகம் எங்களுடன் உயிர்வாழும் ஐயா...
மண்விட்டு மறைந்த நீங்கள், விண் நோக்கிப் போனாலும்
எங்கள் மனம் தன்னில் நீங்காத ஒளியாக நிறைந்திருப்பீர்கள்...
எம்மைவிட்டு முப்பது ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் உயிர் எங்களுடன் வாழ்கின்றது...
பசும்பொன் மானிக்கம் வைரம் வைரீயம்
இவையாவும் உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
எங்கள் மனம் தன்னில் வாழ்ந்தகாலம்
உங்கள் சேவைகள் யாவும் மறையாமல் இருக்கின்றது ஐயா...
அன்பு அண்ணா, உங்களுக்கு எங்கள் கண்ணீர்துளிகளை
மலர் மாலைகளாக்கி காணிக்கையாகத் தருகின்றோம்...
நீங்கள் யேசுவிடம் ஒன்றித்திருங்கள்!

அன்புச் சகோதரர்கள், மனைவி, பிள்ளை.

தோற்றம்: 29-10-1957
மறைவு: 08-08-1990

தகவல்: லெஸ்லி யூலியன் (சகோதரன்)
(647) 531-9668

# SHIRIDI SAI SCHOOL OF CANADA



ADMISSIONS
OPEN FOR
I/S KINDERGARTEN TO GRADE 6

TO REGISTER YOUR INTEREST PLEASE CALL
416-298-3030

2701 MARKHAM ROAD, SCARBOROUGH

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவிதத்தில் அடைவு பிடிக்கப்படும்



## PAWN BROKERING

பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்

## Cash Point

துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.



Cash Point

3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

# Carefirst Family Health Team

Family Health Team




## Accepting New Patients

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFE Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
(BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1270 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 7, 2020

# சுமந்திரனுக்கு எதிராக சசிகலா ரவிராஜ் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக மாவை சேனாதிராஜா தலைமையில் யாழ்ப்பாணத்தில் விசேட கூட்டம்



நேற்று தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட போது யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியில் விருப்பு வாக்குகள் விடயத்தில் சுமந்திரன் குழுவினரால் மோசடி செய்யப்பட்ட நிலையில், தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களில் ஒருவரான திருமதி சசிகலா ரவிராஜ் அழுத வண்ணம் அவ்விடத்தை விட்டு வெளியேறிய விடயம் யாவரும் அறிந்ததே.

ஆனால் இன்று வெள்ளிக்கிழமை, யாழ்ப்பாண நகரில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்திற்கு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமை தாங்கினார். அப்போது சசிகலா ரவிராஜ் அவர்களும் கலந்து கொண்டார்.

தனது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் குழறுபடி ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிட்டுள்ள தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சசிகலா ரவிராஜ், இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவில் முறையிடவுள்ளதாக தெரிவித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# தென்னிலங்கையில் ரணில் உட்பட ஐ.தே.க. வேட்பாளர்கள் அனைவரும் தோல்வி

## ஒரேயொரு போனஸ் ஆசனம் மட்டுமே கிட்டியது

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில், ரணில விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐ.தே.க. வேட்பாளர்கள் அனைவரும் தோல்வி- - கட்சிக்கு எந்தவொரு ஆசனமும் இல்லை. ஆனால் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாம் இடத்தை அடைந்துள்ளது.

அத்துடன் அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் பங்கிடப்படும் 196 ஆசனங்களில் ஐ.தே.க. விற்கு எந்தவொரு ஆசனமும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இத்தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 3 வீதத்திற்கும் குறைவான வாக்குகளையே ஐ.தே.க. பெற்றுள்ளது.



அந்த வகையில் ஐக்கிய தேசிய கட்சிக்கு மொத்தமான 249,435 வாக்குகளே கிடைக்கப் பெற்றுள்ளன. இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 2.15 வீத வாக்குகளாகும்.

கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அடிப்படையில் வழங்கப்படும் போனஸ் அல்லது தேசிய பட்டியல் ஆசனமாக ஒரு ஆசனத்தை அக்கட்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் ரணில் விக்ரமசிங்கவின் 42 வருட அரசியல் வரலாற்றில் முதன் முறை-யாக, அவர் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்ற சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.

# தமிழர் வர்த்தக சம்மேளனம் ஸ்தாபிக்கப்பெற்று 28 வருடங்களுக்குப் பின்னர் சொந்தமான கட்டடத் தொகுதியை தனதாக்கியுள்ளது

கனடாவில் தமிழ் பேசும் வர்த்தகர்களின் வளர்ச்சியை நோக்கி, 28வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப் பெற்ற கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நேற்று முன்தினம் தனக்கு சொந்தமான ஒரு கட்டடத்தொகுதியை கொள்வனவு செய்து உத்தியோகபூர்வமாக அதனை பொறுப்பேற்றுள்ளது.

இங்கே காணப்படும் படத்தில் மேற்படி கட்டடத் தொகுதி காணப்படுகின்றது.

(உள்ளே விபரமான செய்தி)







# கின்னஸ் சாதனையை நிலை நாட்டிய செல்வி சங்கவி ரதன்

கடந்த சனிக்கிழமையன்று காலை கனடா மிசிசாகா நகரில் செல்வி சங்கவி ரதன் அவர்கள் ஒரு கையால், 55 நிமிடங்களில் 30 Rubik's Cube களை தனித்தனி நிறங்களை ஒழுங்குபடுத்தி ஏற்கெனவே உள்ள கின்னஸ் சாதனையான 25 Rubik's Cube சாதனையை முறியடித்தார்-

**Guinness World Record By Sankavi Rathan**

On last Saturday 01-08-2020- in Mississauga, Sankavi Rathan had broken the Guinness World Record in 'Most Rubik's Cubes Solved' with one hand while Hula Hooping. She had solved 30 Cubes in 55 minutes and beat the previous record of 25.